www.Padasalai.Net

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

பாராளுமன்ற பொதுத்தேர்தல்-2024

# வாக்குச்சாவடி தலைமை அலுவலர்

# கையேடு

www.Padasalai.Net

# திருச்சிராப்பள்ளி மாவட்டம்

# பாராளுமன்ற பொதுத்தேர்தல் 2024

# தேர்தல் பணிபுரியும் வாக்குச்சாவடி தலைமை அலுவலர் மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்களுக்கான குறிப்புகள்

தேர்தல் எனும் புனிதமான பணியில் ஈடுபட்டுள்ள உங்களுக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்

- 1951-ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்பிரிவு 26-ன் கீழ் நீங்கள் தேர்தல் பணிக்காக நியமனம் செய்யப்பட்டுள்ளீர்கள்
- 1951- ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்பிரிவு 28ஏ-ன் கீழ் தேர்தல் பணியில் ஈடுபட்டிருக்கும் அனைத்து அலுவலர்களும் இந்திய தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாடு மற்றும் ஆளுமையின் கீழ் வருவர்.
- வாக்குச் சாவடியில் நியாயமான மற்றும் சுதந்திரமான வாக்குப் பதிவு நடைபெற செய்வதே தலைமை அலுவலர் மற்றும் பிற வாக்குச் சாவடி அலுவலர்களின் தலையாய கடமையாகும்.
- உங்களுக்கு வாக்குச் சாவடியில் நடக்கும் அனைத்து நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்த சட்டப்படி முழுமையான அதிகாரம் உள்ளது.
- நீங்கள் தேர்தல் சம்பந்தப்பட்ட அனைத்து விதிகள் நடைமுறைகள் மற்றும் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களை நன்கு அறிந்திருக்க வேண்டும்.

> வாக்கு சாவடி தலைமை அலுவலருக்கான கையேட்டினை (**Hand book for presiding officers**) முன்னரே கவணமாகவும் முழுவதுமாகவும் படிக்கவும். அதில் தெரிவிக்கப்பட்டுள்ள படிவங்கள் குறித்தும், அதன் அனைத்து கலங்களையும் படித்து புரிந்து கொள்ள வேண்டும். இது குறித்து ஏதேனும் சந்தேகங்கள் இருப்பின் உடனடியாக **மண்டல அலுவலரை தொடர்பு கொள்ளவும்**

**பல கட்டங்களில் வாக்குச் சாவடி தலைமை அலுவலர் ஆற்ற வேண்டிய பணிகள் :**

I **வாக்குப்பதிவு நடைபெறுவதற்கு ஒரு நாள் முன்னர்**

II **வாக்குப் பதிவு நாளன்று**

a) வாக்குப் பதிவு சற்று துவங்குவதற்கு முன்னர்

b) வாக்குப்பதிவின் பொழுது

III **வாக்குப் பதிவு முடிவுற்ற பின்னர்**

## வாக்குச்சாவடி தலைமை அலுவலரின் பணிகளும் பொறுப்புகளும்

**வாக்குப்பதிவு நாளுக்கு முந்தைய நாளுக்கான பணிகள்:**

1. தங்களுக்கு பணி வழங்கப்பட்டுள்ள வாக்குச்சாவடியின் அமைவிடம் மற்றும் வழித்தடம் குறித்து முன்கூட்டியே அறிந்து கொள்ளவேண்டும்.

2. வாக்குபதிவிற்கு முந்தைய நாள் நண்பகல் 12.00 மணிக்குள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடிக்கு சென்றடைய வேண்டும்..

3. வாக்குச்சாவடியை சென்றடைந்தவுடன்
   - ❖ அங்குள்ள அடிப்படை வசதிகள், வாக்காளருக்கு செய்யப்பட வேண்டிய வசதிகள்
   - ❖ வாக்குப்பதிவு நடத்த தேவையான மேசை, நாற்காலிகள் போன்ற உபகரணங்கள் இருப்பதை உறுதி செய்து கொள்ளவேண்டும்.
   - ❖ இதற்காக வாக்குச்சாவடி நிலை அலுவலர் / கிராம நிர்வாக அலுவலர் / கிராம உதவியாளர் ஆகியோரின் உதவியை கேட்டுப்பெற வேண்டும்.

4. வாக்குப்பதிவுக்கு தேவையான தேர்தல் பொருட்களை மண்டல அலுவலர் ஒப்படைக்கும்போது
   - ❖ மண்டல அலுவலரால் ஒப்படைக்கப்படும் EVM மற்றும் VVPAT ஆகியவை உங்கள் வாக்குசாவடிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது தானா? என்பதை Addreess Tag மூலம் சரிபார்த்துக் கொள்ள வேண்டும். ,
   - ❖ VVPAT ஆனது LOCK பொசிசனில் உள்ளதா? என ஆய்வு செய்ய வேண்டும்
   - ❖ Arrow Crossmark Rubber Stamp மற்றும் Metal Seal மற்றும் Distinguished Mark ஆகியவற்றை சரிபார்க்கவும்.
   - ❖ வாக்குச்சாவடியில் பயன்படுத்திட Marked Copy-1, Reference Copy-2 என்ற எண்ணிக்கையில் வாக்காளர் பட்டியல் வழங்கப்பட்டுள்ளதா? எனவும், அது உங்களது வாக்குசாவடிக்கு உரியதுதானா? என்பதையும் சரிபார்த்திட வேண்டும்.
   - ❖ இதில் அனைத்து பக்கங்களும் விடுதலின்றி இடம்பெற்றுள்ளதா எனவும், துணைப்பட்டியல்கள் இணைக்கப்பட்டுள்ளதா எனவும், அனைத்து பக்கங்களும் தெளிவாக அச்சடிக்கப்பட்டுள்ளனவா? எனவும் சரிபார்க்க வேண்டும்.
   - ❖ வழங்கப்பட்டுள்ள பச்சைதாள் முத்திரையில் (Green Paper Seal) உள்ள எண்களை சரிபார்க்கவும்.
   - ❖ ஒவ்வொரு வாக்குசாவடிக்கும் 20 எண்ணிக்கையில் வழங்கப்படும் ஆய்வுக்குரிய வாக்குச் சீட்டுகளை அவற்றின் எண்களோடு ஒப்பிட்டு சரியாக உள்ளனவா? அவற்றின் பின்புறம் Tendered Ballot Paper என அச்சடிக்கப்பட்டுள்ளதா என சரிபார்க்க வேண்டும்.
   - ❖ வாக்கு சாவடி பயன்பாட்டுக்கு வழங்கப்பட்டுள்ள Address Tag & Special Tag சரிபார்க்க வேண்டும்.
   - ❖ தலைமை அலுவலர் கையேட்டில் குறிப்பிடப்பட்ட பிற அனைத்து தேர்தல் பொருட்களும் போதுமான எண்ணிக்கையில் வழங்கப்பட்டுள்ளதா என்றும் அது தனது வாக்குச் சாவடிக்கு உரியது தானா என்பதை சரிபார்த்து பெற்றுக்கொண்டு மண்டல அலுவலரிடம் ஒப்புகை ரசீது அளித்திட வேண்டும்.

5. வாக்குப் பதிவு அலுவலர்கள், Micro observer, web casting person மற்றும் காவலர்கள் அனைவரும் வந்துள்ளனரா? என்பதையும், எவரேனும் வரவில்லை எனில் மண்டல அலுவலருக்கு/உதவி தேர்தல் அலுவலருக்கு தகவல் தெரிவித்து அவர்கள் வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

6. உங்களிடம் வழங்கப்பட்டுள்ள வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் பொருட்களை நீங்களே பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். வாக்குப் பதிவு அலுவலர்கள் வாக்குச்சாவடியிலேயே தங்க வேண்டும். **எக்காரணம் கொண்டும் வாக்குப்பதிவு இயந்திரங்களை வெளியில் எங்கும் எடுத்துச் செல்ல அனுமதியில்லை.**

7. வாக்குச்சாவடிக்கு வெளியே 1. வாக்கு சாவடி விபரம் 2. வேட்பாளர் விபரம் 3. செய்யக் கூடியவை மற்றும் செய்யக் கூடாதவை மற்றும் 4. அங்கீகரிக்கப்பட்ட அடையாள ஆவணங்கள் மற்றும் எவ்வாறு வாக்களிப்பது என்ற **நான்கு அறிவிப்பை** அனைவருக்கும் நன்கு தெரியும் வகையில் ஒட்ட வேண்டும்.

8. வாக்குச்சாவடியின் 100 மீட்டர் சுற்றளவுக்குள் எந்தவிதமான அரசியல் விளம்பரங்களோ 200 மீட்டர் சுற்றளவுக்குள் வேட்பாளரின் பந்தல்களோ அமைக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

9. வாக்குப் பதிவிற்கு முன்தினம் வாக்குச்சாவடியில் பின்வரும் நெறிமுறைகளின்படி ஏற்பாடுகள் செய்து கொள்ளவேண்டும்.

- ❖ வாக்குச்சாவடியில் போதுமான இடவசதி
- ❖ வாக்காளர்கள் உள்ளே நுழையவும், வெளியேரவும் தனித்தனி வழிகள்
- ❖ ஒரு நுழைவாயில் மட்டும் இருந்தால் நடுவில் ஒரு கயிற்றை கட்டி தனித்தனி வழிகள் ஏற்படுத்தி கொள்ளவேண்டும். உள்ளே, வெளியே என அட்டைகள் பொருத்தவேண்டும்.
- ❖ வாக்குப் பதிவு இயந்திரம் (Ballot Unit) வைக்கப்படும் Voting Compartment க்கு போதுமான அளவு வெளிச்சம் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். VVPAT இயந்திரத்தின் மீது நேரடியாக விளக்கின் ஒளிபடுமாறு அமைத்திருத்தல் கூடாது.
- ❖ வாக்குப் பதிவு அலுவலர்கள் 1 மற்றும் 2 ஆகியோருக்கு பின்னால் வாக்குச்சாவடி முகவர்களுக்கு இருக்கை வசதி செய்யப்படவேண்டும்.
- ❖ வாக்குப் பதிவு அலுவலர் 3-ன் இருக்கை, Ballot Unit வைக்கப்படும் Voting Compartment அருகில் அமைக்கப்பட வேண்டும்.
- ❖ Control Unit மற்றும் Ballot Unit இணைக்கும் வயர்களை எவரும் தாண்டிச் செல்லாதபடியும், வயர்கள் வாக்காளர்களின் கால்களில் மாட்டாத வகையிலும் வழி அமைக்கப்படவேண்டும்.
- ❖ வாக்களிக்கும் ரகசியம் காக்கப்படும் வகையில் Voting Compartment ம், Web camara வும் அமைக்கப்பட்டுள்ளதை உறுதி செய்திடல் வேண்டும்
- ❖ அழியாத மை (Indelible Ink) 700 வாக்காளர்களுக்கு ஒரு குப்பி வீதம் வழங்கப்பட்டுள்ளதா என்பதை சரிபார்த்துக் கொள்ளவேண்டும்.
- ❖ மேற்படி குப்பிகளை அதற்கென வழங்கப்பட்டுள்ள பிளாஸ்டிக் கிண்ணத்தில் மணல் நிரப்பி அதில் அசையாமல் இருக்கும் வண்ணம் வைக்கப்பட வேண்டும்.
- ❖ வாக்குச்சாவடிக்குள் எந்த ஒரு அரசியல் தலைவரின் படம் அல்லது வாக்காளரை கவரக்கூடிய சின்னம் போன்றவை எவை இருந்தாலும் அதனை அப்புறப்படுத்திட வேண்டும். அல்லது அதனை முழுமையாக மூடிவிடவேண்டும்.

POLL DAY: LAYOUT OF POLLING STATION



# DISPERSAL DAY

## WHAT TO CHECK?

| Ballot Unit(s) | Control Unit | VVPAT |
|---|---|---|
| • Address Tags of BU to ensure BU(s) is pertaining to your assigned polling station<br>• Pink Paper Seals of BU are intact<br>• Ballot Paper is installed properly<br>• Ballot buttons upto NOTA (Candidate Blue Buttons) are unmasked<br>• Thumb wheel position is 01 for first BU (If more than 01 BU is used, Thumb wheel position for 2nd BU is 02, for 3rd BU is 03 and so on) | • Address Tags of CU to ensure CU is pertaining to your assigned polling station<br>• Pink Paper Seals of CU are intact<br>• Switch ON the CU (without connecting to BU and/or VVPAT) to check Battery status and number of contesting candidates. Thereafter, Switch OFF the CU | • Address Tags of VVPAT to ensure that VVPAT is pertaining to your assigned polling station<br>• Power Pack (Battery) is installed<br>• VVPAT knob is horizontal (i.e. Transportation mode). If VVPAT knob is vertical (i.e. Working mode), keep the knob horizontal. |

## DON'T DO

- Don't connect Ballot Unit, Control Unit and VVPAT during dispersal.
- Don't keep BU, CU and VVPAT outside their respective carrying cases after checking.
- Don't keep VVPAT knob vertical (Working mode) while transporting.
- Don't take away EVM & VVPAT to any unauthorised place like residence, hotel etc.
- Don't remove any seal from BU, CU and VVPAT.
- Don't use vehicle other than vehicle provided for dispersal.
- Don't stay at any place other than designated place.
- Don't set up Voting Compartment near open window or door.
- Don't set up Voting Compartment just below the highly illuminated bulb/light.

## <u>வாக்குப் பதிவு நாளன்று</u>

**மாதிரி வாக்குப்பதிவு நேரம் : காலை 6.00 மணி**
**வாக்குப்பதிவு நேரம் : காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை**

9. வாக்குபதிவு நாளன்று காலையில் வாக்குப்பதிவு துவங்குவதற்கு சுமார் 2 மணிநேரத்திற்கு முன்னரே வாக்குப்பதிவு இயந்திரங்களை அவற்றிற்கான பெட்டிகளில் இருந்து வெளியே எடுத்து அவற்றிற்குரிய கேபிள்களை கொண்டு முறைப்படி பொருத்த வேண்டும்.

- **முதலாவதாக Ballot Unit கேபிளை VVPAT உடனும் VVPAT கேபிளை Control Unit உடனும் இணைக்க வேண்டும்.**

| |
|---|
| BVC என்பதை நினைவில் கொள்க<br>Ballot Unit- VVPAT- Control Unit |

- **<u>கேபிள்களை முற்றிலும் பொருத்தப்படும் வரை Control Unit Switch Off செய்து வைத்திருக்க வேண்டும்.</u>**

- கேபிள்கள் இணைக்கப்பட்ட பின் VVPAT இயந்திரத்தின் பின்பக்கத்தில் உள்ள Switch அல்லது Knob ஐ Unlock அதாவது Vertical Position க்கு கொண்டு வரவும்




- VVPAT பின்புறம் உள்ள Knob ஐ Vertical Position கொண்டு வந்த பின்பு Control Unit ஐ ON செய்ய வேண்டும். செயலாக்கியவுடன் பச்சை விளக்கு எரியும்.

- தற்போது VVPAT இயந்திரம் செயல்பட்டு அதன் திரையில் உள்ள விளக்கு ஒளிரும். **<u>மேலும் 7 Slip கள் Print செய்யப்படும்</u>**.

- அவை அனைத்தும் Pass என உள்ளதா என்பதை சரிபார்க்க வேண்டும்.

- ஏதேனும் ஒன்றில் Printer Error என தெரிவிக்குமாயின் உடனடியாக உங்களது மண்டல அலுவலரை (Zonal Officer) தொடர்பு கொண்டு தெரிவிக்கவும்.

## M3 EVM VVPAT உடன் இணைக்கும் படம்



**<u>How to connect EVM mechines</u>**

- There is no cable in CU (Control Unit)
- Connect in BVC pattern as shown above
- Switch off CU during EVM settings or sealing process
- Check the Knop in VVPATs (Back side) before connection
    - Horizontal position – Lock condition
    - Vertical posirion - Un lock condition

# BHARAT ELECTRONICS LTD

**EVM and VVPAT Errors and their Solutions during Commissioning and Poll Day.**

## Control Unit

| Sl.No | Error in CU Display | Solutions | |
|---|---|---|---|
| | | Till Mock Poll | Actual Poll |
| 1 | Invalid or PADU Not Connected | **Close - Result - Clear need to be done.** | **CHANGE WHOLE SET (CU, BU & VVPAT)** In such case Mock poll has to be conducted by cassting one vote to each contesting candidate including NOTA. |
| 2 | No Buzzer or No Beep Sound | **Replace CU** | **CHANGE WHOLE SET (CU, BU & VVPAT)** In such case Mock poll has to be conducted by cassting one vote to each contesting candidate including NOTA. |
| 3 | Date and Time Mismatch or Clock Error | **Replace CU** | **CHANGE WHOLE SET (CU, BU & VVPAT)** In such case Mock poll has to be conducted by cassting one vote to each contesting candidate including NOTA. |
| 4 | Ballot Button Not Working (or) Digit Not OK (or) Change CU Battery | Switch Off CU and Switch ON CU. If it is showing same error again. **Replace CU** | **CHANGE WHOLE SET (CU, BU & VVPAT)** In such case Mock poll has to be conducted by cassting one vote to each contesting candidate including NOTA. |

## Ballot Unit

| Sl.No | Error in BU Display | Solutions | |
|---|---|---|---|
| | | Till Mock Poll | Actual Poll |
| 1 | BU Not Responding | Switch Off CU And Check Connections. Switch ON CU. If It Is Showing Same Error Again. **Change BU** | Switch Off CU And Check Connections.Switch ON CU. If It Is Showing Same Error Again. **CHANGE WHOLE SET (CU, BU & VVPAT)** In such case Mock poll has to be conducted by cassting one vote to each contesting candidate including NOTA. |
| 2 | BU Candidates Button aren't working | Replace BU | **CHANGE WHOLE SET (CU, BU & VVPAT)** In such case Mock poll has to be conducted by cassting one vote to each contesting candidate including NOTA. |
| 3 | Pressed Error | Switch Off CU And Check candidate Buttons.Switch ON CU. If It Is Showing Same Error Again. **Replace BU** | Switch Off CU And Check candidate Buttons. Switch ON CU. If It Is Showing Same Error Again. **CHANGE WHOLE SET (CU, BU & VVPAT)** In such case Mock poll has to be conducted by cassting one vote to each contesting candidate including NOTA. |

| VVPAT | | | |
|---|---|---|---|
| Sl.No | Error in BU Display | Solutions | |
| | | Till Mock Poll | Actual Poll |
| 1 | Initial 7 Slips In VVPAT Not Printing and not Cutting | Check The Position Of Backside Knob. It Should Be In Vertical Position. | Check The Position Of Backside Knob. It Should Be In Vertical Position. |
| 2 | VVPAT vote Slips Are Not Coming | "Follow the SOP of Polling officer" and If It Is Showing Same Error Again. Change VVPAT Only | "Follow the SOP of Polling officer" and If It Is Showing Same Error Again. Change VVPAT Only No need to Do the Mock poll |
| 3 | VVPAT "Error 1" CHANGE VVPAT BATTERY ERROR | Switch Off CU. Change VVPAT Battery | Switch Off CU. Change VVPAT Battery |
| 4 | VVPAT "Error 2" CHANGE VVPAT (2.7, 2.10 , 2.1) | Switch Off And Switch On CU. If Error Is Repeating, Change VVPAT Only | Switch Off And Switch On CU. If Error Is Repeating, Change VVPAT Only No need to Do the Mock poll |
| 5 | VVPAT 0 SLIP LEFT | Change VVPAT Only | Change VVPAT Only No need to Do the Mock poll |
| 6 | 2.9 | Do not position the VVPAT near an open window or directly under a bulb or halogen lamp. Switch Off And Switch On CU. If Error Is Repeating Change VVPAT Only | Do not position the VVPAT near an open window or directly under a bulb or halogen lamp. Switch Off And Switch On CU. If Error Is Repeating Change VVPAT Only No need to Do the Mock poll |

## 10. வாக்குச்சாவடி முகவர்கள்

- வாக்குப்பதிவு நாளன்று வாக்குப்பதிவுக்கு 75 நிமிடங்களுக்கு முன்னதாக வாக்குச்சாவடி முகவர்கள் வாக்குச்சாவடிக்குள் அழைக்கப்பட்டு படிவம்-10-ல் வேட்பாளர் அல்லது அவரது முதன்மை முகவர் (Principle Agent) கொடுக்கும் வாக்குச்சாவடி முகவர்களின் நியமன கடிதத்தில் உள்ள கையெழுத்தும், வாக்குப்பதிவு உபகரணங்களுடன் அனுப்பப்பட்ட மாதிரி கையெழுத்தும் ஒரே மாதிரி உள்ளனவா? என்பதை ஒப்பிட்டு சரிபார்த்திட வேண்டும்.

- ஒவ்வொரு வேட்பாளரும் அந்தந்த வாக்கு சவாடிக்கு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வைத்திருக்கும் சம்மந்தப்பட்ட சட்டமன்ற தொகுதியை சேர்ந்த நபரை மட்டுமே ஒரு முகவர் மற்றும் இரு Relief முகவர்களை நியமிக்கலாம்.

- அவ்வாறு முகவர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ள நபர்கள் நியமனக் கடிதத்தை வாக்கு சாவடி தலைமை அலுவலரிடம் அளித்து அடையாள அட்டையினை பெற்றுக்கொள்ள வேண்டும்

- முகவர்கள் தங்களது அடையாள அட்டையினை அனைவருக்கும் தெரியும் வண்ணம் அனிந்து இருக்கவேண்டும்

    - கட்சி சின்னங்கள், வேட்பாளர்களின் சின்னங்கள் ஆகியவற்றை முகவர்கள் அனிந்திருக்க கூடாது. இவற்றை தலைமை அலுவலர் உறுதி செய்ய வேண்டும்.
    - ஒரே நேரத்தில் ஒரு முகவரைத் தவிர வேறு முகவர்கள் இருக்கக் கூடாது.
    - முகவர்கள் வாக்குசாவடியை விட்டு வெளியே செல்லும் போதோ, திரும்ப வரும் போதோ எந்த ஒரு ஆவணத்தையும் கொண்டு செல்லவோ அல்லது கொண்டு வரவோ அனுமதி கிடையாது
    - முகவர்களை வாக்குப்பதிவு இந்திரத்தில் உள்ள வேட்பாளர்களின் வரிசைப்படி அமர வைத்திடல் வேண்டும்
    - பிற்பகல் 3.00 மணிக்கு பின்னர் முகவர்கள் வாக்குச்சாவடியை விட்டு வெளியே செல்ல அனுமதிக்க கூடாது.

## 11. மாதிரி வாக்குப்பதிவு(MOCK POLL)

- வாக்குப்பதிவு நாளன்று வாக்குப்பதிவு துவங்குவதற்கு 1 மணி நேரத்திற்கு முன்னதாக மாதிரி வாக்குப்பதிவினை நடத்திடல் வேண்டும்.
- குறைந்தபட்சம் இரண்டு வேட்பாளர்களின் முகவர்களாவது வரும் வரை 15 நிமிட நேரம் மாதிரி வாக்குப்பதிவினை தாமதிக்கலாம்.
- அதன் பின் ஆஜரிலிருக்கும் முகவர்கள் முன்னிலையில் மாதிரி வாக்குப்பதிவு (MOCK POLL) நடத்திட வேண்டும்.
- மாதிரி வாக்குப்பதிவின் போது BALLOT UNIT மற்றும் VVPAT இயந்திரம் VOTING COMPARTMENT-க்குள் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.
- ஒவ்வொரு வேட்பாளரின் முகவரையும் தத்தமது வேட்பாளருக்கு வாக்களிக்க சொல்லி நோட்டா உட்பட அதன் விபரங்களை அதற்கென கொடுக்கப்பட்டுள்ள தாளில் குறித்திடல் வேண்டும்.
- கட்டாயமாக 50 வாக்குகளை பதிவு செய்ய வேண்டும்.
- எந்த ஒரு வேட்பாளரின் முகவர் வரவில்லை எனில் அந்த வேட்பாளருக்கும் ஒரு வாக்கினை சுழற்சி முறையில் (Rotation) வாக்குப்பதிவு அலுவலர் ஒருவரால் பதிவு செய்ய வேண்டும்.
- Nota உள்பட அனைத்து வேட்பாளருக்கும் மாதிரி வாக்குப்பதிவின் போது (ஒரு வாக்கு கட்டாயம்) வாக்குப்பதிவு செய்வதை உறுதிப்படுத்திட வேண்டும்.
- ஒவ்வொரு முறையும் வாக்குப்பதிவு செய்யும் போது VVPAT இயந்திரத்தின் திரையில் எந்த வேட்பாளருக்கு வாக்களிக்கப்பட்டதோ அவரது பெயர் சின்னம் அச்சிட்டு வெளியில் வருவதை முகவர்களிடம் காண்பிக்க வேண்டும்.
- 50 வாக்குகள் பதிவு செய்து முடிவடைந்ததும் வாக்குப்பதிவினை முடிவுக்கு கொண்டு வரும் Control Unit ல் Close Button ஐ Press செய்திடல் வேண்டும்.
- பின்னர் VVPAT இயந்திரத்தின் Drop Box ல் உள்ள பேப்பர் சிலிப்புகளை எடுத்து எண்ணிக்கை செய்து, வேட்பாளர் வாரியாக ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ள விபரத்தின் அடிப்படையில் அதனை சரிபார்க்கவும்
- பின்னர் அந்த பேப்பர் சிலிப்களின் பின்புறத்தில் **MOCK POLL SLIP** என்ற ரப்பர் ஸ்டாம்ப் முத்திரை வைத்திடல் வேண்டும்
- அதனை அதற்கென்று கொடுக்கப்பட்டுள்ள **பிரத்யேக தடிமனான கருப்புத்தாள் உறையில்** போட்டு வாக்குச்சாவடி தலைமை அலுவலரின் முத்திரையை இட்டு அந்த உறையின் மீது வாக்குச்சாவடி தலைமை அலுவலரும் மற்றும் வாக்குச்சாவடி முகவர்களும் கையொப்பமிட வேண்டும்.
- மேற்படி உறையின் மீது வாக்குச்சாவடியின் எண், பெயர், சட்டமன்ற தொகுதியின் எண் மற்றும் பெயர், வாக்குப்பதிவு நாள் இவற்றுடன் VVPAT PAPER SLIPS OF MOCK POLL என எழுதப்படல் வேண்டும்.
- மாதிரி வாக்குப்பதிவு முடிந்தவுடன் அதற்கான சான்றினை (Mock Poll Certificate) தயார் செய்திடல் வேண்டும். அதன் நகல் முகவர்களுக்கு வழங்கிடல் வேண்டும்.
- பின்னர் CU ல் உள்ள Result section ல் உள்ள Clear Button ஐ அழுத்தி ஏற்கனவே மாதிரி வாக்குபதிவின் போது பதிவாகி உள்ள வாக்குகளை முகவர்களின் முன்னிலையில் கீழ்கண்டவாறு அழிக்கப்பட வேண்டும்.

### EVMல் MOCK POLL CLEAR செய்வதற்கான நடைமுறை

CLOSE -> RESULT -> CLEAR

**மாதிரி வாக்குபதிவில் பதிவு செய்யப்பட்ட வாக்குகள் Clear செய்யப்பட்டதா என்பதை Total பட்டனை அழுத்தி அது ”0” காட்டுவதை உறுதி செய்திடல் வேண்டும்.**

**VVPAT Drop Box ல் எவ்வித Paper Slip களும் இல்லை என்பதை உறுதி செய்து Drop Box Cover ஐ மூடி முத்திரையிட வேண்டும்.**

## <u>பச்சை நிற தாள் முத்திரை (Green Paper Seal)</u>

- ❖ பச்சை நிற தாள் முத்திரையை (Green Paper Seal) எடுத்து அதன் எண்ணை முகவர்களிடம் தெரிவிக்கவும்




- ❖ அதன் பின்புறம் வாக்குச்சாவடி **தலைமை அலுவலர் மற்றும் முகவர்களின் கையொப்பமிட வேண்டும்.**
- ❖ கட்டுப்பாட்டு கருவியின் Result Section-ல் உட்புற கதவில் பச்சைதாள் முத்திரையை புகுத்தி கீழ்கண்டவாறு ஒட்டவும்



- ❖ அந்த கதவை மூடி சிறப்பு டாக் (Special Tag) உள்ள எண்ணை குறித்துக் கொள்ள முகவர்களிடம் தெரிவிக்க வேண்டும். Special Tag லும் **முகவர்களும், வாக்குச்சாவடி தலைமை அலுவலரும் கையொப்பமிட வேண்டும்.**




COMMON ADDRESS TAG





SPECIAL TAG

- ❖ பின்னர் (Special Tag) கொண்டு Result Section ஐ முத்திரையிட வேண்டும். பின் Result Section ல் வெளிப்புற கதவை மூடி Address Tag ஐ கொண்டு முத்தரையிட வேண்டும்.

- ❖ அதே போல் VVPAT ன் பக்கவாட்டில் உள்ள Ballot Slip Compartment ஐ Address Tag கொண்டு சீலிடல் வேண்டும்.

www.Padasalai.Net

# MOCK POLL FLOW CHART



12. **இரகசியம் காத்தல்:** வாக்குப் பதிவு தொடங்குவதற்கு முன்னதாக வாக்களிப்பு ரகசியத்தை காத்திடல் குறித்து வாக்குச் சாவடி தலைமை அலுவலர் உறுதி மொழியை படித்து காட்டி கையொப்பமிடவேண்டும். வந்திருக்கும் வாக்குச் சாவடி முகவர்களின் கையொப்பங்களையும் பெறவேண்டும். இதே போல வாக்குப் பதிவின் முடிவிலும் உறுதி மொழியை படித்துக்காட்டி கையொப்பமிட வேண்டும்.

13. குறித்த நேரத்தில் (காலை 07.00 மணி) வாக்குப் பதிவு ஆரம்பிக்கவேண்டும்.

14. ஆண், பெண் மற்றும் வயதானவர்கள்/மாற்றுத்திறனாளிகளுக்கு என தனித்தனி வரிசையில் நிறுத்த வேண்டும். ஒரு ஆண் வாக்காளருக்கு பின் இரண்டு பெண் வாக்காளர்கள் என்ற வீதத்தில் வாக்களிக்க அனுமதித்து முறைப்படுத்த வேண்டும்.

15. **வாக்குச்சாவடிக்குள் அனுமதிக்கப்படும் நபர்கள்:**
   - ✓ வாக்காளர்கள், வாக்குப் பதிவு அலுவலர்கள்,
   - ✓ வேட்பாளர்கள் மற்றும் அவர்களது முகவர்கள், வாக்குச் சாவடி முகவர்கள்,
   - ✓ வாக்காளருடன் வரும் அவரது கைக்குழந்தை,
   - ✓ கண்பார்வையற்ற மற்றும் பிறர் உதவியின்றி நடக்க அல்லது வாக்களிக்க இயலாத வாக்காளருக்கு உதவிக்கு வரும் ஒரு நபர்
   - ✓ தேர்தல் ஆணையத்தின் அடையாள அட்டை பெற்றவர்கள் மற்றும் பிற தேர்தல் அலுவலர்கள்

16. வாக்கு சாவடிக்குள் புகைப்படம் / வீடியோ எடுக்க தேர்தல் ஆணையத்தின் அனுமதி பெற்றவர்களை தவிர வேறு எவரும் புகைப்படம் / வீடியோ எடுக்கவோ அல்லது செல்பேசி
எடுத்து செல்லவோ அனுமதிக்கக் கூடாது.

17. வாக்குப் பதிவு தொடங்கியது முதல் வாக்குச் சாவடிக்குள் வாக்காளரை அடையாளம் காணுதல், வாக்காளர் பதிவேட்டில் **(படிவம் 17A)** பதிவு மேற்கொள்ளுதல், அழியாத மை வைத்தல், வாக்களித்தல் ஆகிய அனைத்து பணிகளும் சரியாக நடைபெறுகிறதா என்பதை இடைவிடாது கண்காணித்திடவேண்டும்.

18. வாக்குபதிவு ஆரம்பித்து ஐந்து அல்லது பத்து வாக்குகள் பதிவு செய்யப்பட்ட பின்னர் CU ல் உள்ள Total Button ஐ அழுத்தி பதிவான வாக்குகளின் எண்ணிக்கையினை 17 (A) பதிவேட்டுடன் ஒப்பிட்டு சரிபார்த்ததுக்கொள்வது நல்லது.

19. 17 (A) பதிவேடு பராமரிக்கும் பணியை வாக்குப்பதிவு அலுவலர் -II மேற்கொள்ளும்பொழுது பதிவேட்டில் உள்ள அனைத்து கலங்களையும் குறிப்பாக அடையாள அட்டை எண் மற்றும் தேர்தல் ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட இதர ஆவணங்களின் விபரங்களை முழுமையாக பூர்த்தி செய்ய வேண்டும். இதனை வாக்குச் சாவடித் தலைமை அலுவலர் முழுமையாக கண்காணிக்க வேண்டும். மண்டல அலுவலர்களும் தங்களது வருகையின் பொழுது மேற்பார்வையிடவேண்டும்.

20. வாக்குப் பதிவு தொடங்கியது முதல் இடைவேளை ஏதுமின்றி தொடர்ந்து நடைபெறவேண்டும். வாக்குப் பதிவு அலுவலர்கள் சுழற்சி முறையில் தங்களது உணவை எடுத்துக்கொள்ளவேண்டும்.

21. **தேர்தல் ஆணையத்தால் அறிவுறுத்தியுள்ளபடி கீழ்கண்டவாறு அவ்வப்போது கைபேசி செயலி ஆப் மூலமும், மண்டல அலுவலருக்கும் தகவல் அனுப்பவேண்டும்.**
   - ✓ தேர்தல் பொருட்களை வாக்குச் சாவடியில் பெற்றுக்கொண்டதற்கு,
   - ✓ வாக்குப் பதிவு அலுவலர்கள் அனைவரும் வருகை புரிந்ததற்கு,
   - ✓ தேர்தல் நாளன்று மாதிரி வாக்குப் பதிவு நடத்தப்பட்டதற்கு,
   - ✓ குறித்த நேரத்தில் வாக்குப் பதிவு தொடங்கியதற்கு
   - ✓ 2 மணி நேரத்திற்கு ஒரு முறை பதிவான வாக்கு எண்ணிக்கை மற்றும்
   - ✓ வாக்குப் பதிவு நிறைவு செய்யப்பட்டது குறித்து தெரிவிக்க வேண்டும்.

22. **<u>எதிர்க்கப்பட்ட வாக்குகள் (Challenged Votes):</u>**

- ❖ வாக்களிக்க வரும் வாக்காளரின் அடையாளம் குறித்து முகவர் எவரேனும் எதிர்ப்பு தெரிவித்தால் அது எதிர்க்கப்பட்ட வாக்கு (Challenged Votes) ஆகும்.
- ❖ எதிர்ப்பு தெரிவித்த முகவரிடமிருந்து ரூ.2 -ஐ வசூலித்துக் கொண்டு, முழு விசாரணை நடத்த வேண்டும். ( பிற சேர்க்கை 19 ஐ பார்க்கவும்)
- ❖ விசாரணையின் முடிவில் எதிர்ப்பு நிருபிக்கப்படவில்லை என்றால் அந்த வாக்காளரை வாக்களிக்க அனுமதிக்க வேண்டும்.
- ❖ எதிர்ப்பு நிருபிக்கப்பட்டால் கட்டணத்தை முகவரிடம் திருப்பி செலுத்தி விட்டு அந்நபரை காவல் துறை வசம் ஒப்படைக்கவேண்டும்.
- ❖ **படிவம் 14 ல் இது குறித்து** அறிக்கை தாக்கல் செய்திடல் வேண்டும்.

**23. Clasified service voters (CSV)** : CSV க்காக முன்னரே ஒப்புதல் பெற்ற பதிலி ஆள் ஒருவர் வாக்களிக்கலாம். அவ்வாறான இனங்களில் **<u>பதிலி நபருக்கு இடது கை நடுவிரலில் மை வைத்திட வேண்டும்</u>**. மேலும் பதிலி நபர் அவரது வாக்கினையும் அவருக்குரிய வாக்குசாவடியில் செலுத்திடலாம். இது குறித்து படிவம் 17 A ல் PV என குறிப்படுவதுடன் தங்களுக்கு வழங்கப்பட்ட CSV பட்டியல் வரிசை எண்ணை பதிவு செய்திட வேண்டும்.

24. **வாக்களிக்கும் ரகசியத்தை மீறல் (Rule 49 M) :** வாக்காளர் ஒருவர், **வாக்களிக்கும் ரகசியத்தை மீறினால் விதி 49(M) ன்படி** அவரை வாக்களிக்க அனுமதிக்காமல், 17 (A) பதிவேட்டின் Remarks கலத்தில் Not Allowed to Vote– Voting Procedure Violated என எழுதி, அவரை வாக்குச் சாவடியை விட்டு வெளியே அனுப்பிட வேண்டும்.

25. **பார்வையற்றவர்கள் மற்றும் பிற காரணங்களால் நேரடியாக EVM ல் வாக்களிக்க முடியாதவர்கள் விதி 49N** ன் கீழ் 18 வயது நிரம்பிய ஒரு நபரை (Campanion) உடன் அழைத்து சென்று வாக்களிக்கலாம்.

- ❖ இந்நேர்வில் மேற்கண்ட வகையிலான வாக்காளர்களுக்கு ஒரு நபர் ஒரு முறை மட்டுமே துணையாக(Companion) செயல்பட முடியும.
- ❖ துணையாக வரும் நபருக்கு **<u>வலது கை ஆட்காட்டி விரலில்</u>** மை வைக்க வேண்டும்.
- ❖ மேலும் அந்நபரிடமிருந்து ஒரு உறுதிமொழி (பிற சேர்க்கை 18) பெற வேண்டும்.

**<u>26. வாக்களிக்க மறுத்தல் (Rule 49 O) :</u>**

- ❖ ஒரு வாக்காளர் பற்றிய விவரங்களை 17 (A) பதிவேட்டில் பதிவு செய்து, அவருக்கு அழியாத மை வைக்கப்பட்ட பின்னர், அவர் **வாக்களிக்க விரும்பவில்லை என தெரிவிக்கலாம்.**
- ❖ **விதி 49(0)ன்படி** 17 (A) பதிவேட்டின் Remarks கலத்தில் Refused to Vote அல்லது Left without Voting என பதிவு செய்திட வேண்டும்.
- ❖ வாக்குச் சாவடி தலைமை அலுவலர் முழு கையொப்பமிட்டு, அதன் அருகில் அந்த வாக்காளரின் கையொப்பத்தையும் பெற வேண்டும்.
- ❖ இவ்வாறான இனங்களால் EVM total Vote க்கும் 17A பதிவேட்டில் பதிவாகி உள்ள **<u>ஓட்டு எண்ணிக்கைக்கும் வாக்கு எண்ணிக்கை குறைவு வித்தியாசம் வர வாய்பு உள்ளது.</u>**

**27 ஆய்வுக்குரிய வாக்குகள் (Tendered Votes)(Rule-49P) :**

- ❖ ஒரு வாக்காளரின் வாக்கை ஏற்கனவே எவரேனும் பதிவு செய்துவிட்டதாக தெரியவந்தால், தற்போது வாக்களிக்க வந்த வாக்காளரின் அடையாளம் தொடர்பான ஆவணங்களை சரிபார்த்து, அவரை ஆய்வுக்குரிய வாக்குத்தாள் (Tendered Ballot Paper) மூலம் வாக்களிக்க அனுமதிக்கலாம்.
- ❖ **<u>அவரை EVM மூலம் வாக்களிக்க அனுமதிக்கக் கூடாது.</u>**
- ❖ இம்மாதிரி ஆய்வுக்குரிய வாக்குத்தாள்களை தனியே கணக்கு வைத்து (படிவம் 17B) வாக்குப் பதிவு முடிந்ததும் தனி உறையில் இட்டு, சீல் வைத்து மண்டல அலுவலரிடம் ஒப்படைக்கவேண்டும்.

**28. விதி 49 MA:**

- ❖ வாக்காளர் ஒருவர் தான் வாக்களித்த வேட்பாளர் அன்றி வேறொரு நபருக்கு வாக்களித்ததாக VVPAT கருவியில் தோன்றுவதாக தெரிவித்தால் வாக்குச்சாவடி தலைமை அலுவலர் அவரிடம் மேற்படி குற்றச்சாட்டு தொடர்பாக ஒரு எழுத்துப்பூர்வமாக உறுதிமொழியினை பெற வேண்டும். (**பிறசேர்க்கை 17 ஐ பார்க**)
- ❖ அதன்பின் படிவம் 17 A ல் அவ்வாக்காளருக்குகென மற்றொரு பதிவினை மேற்கொண்டு வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில் மீண்டும் ஒரு முறை அவரை வாக்களிக்க அனுமதிக்கலாம்.
- ❖ அவ்வாறு வாக்களிக்கும் போது அவரது குற்றச்சாட்டு தவறு எனில் அது குறித்த விபரத்தினை 17 A பதிவேட்டில் அவர் யாருக்கு சோதனை வாக்களித்தார் (Test Vote) என்ற விபரத்தினை பதிவு செய்து அவரது கையொப்பத்தினை பெற வேண்டும். (**பிறசேர்க்கை 20 ஐ பார்க**)
- ❖ அவரது குற்றச்சாட்டு சரி எனில் வாக்குபதிவினை நிறுத்தி மண்டல அலுவலருக்கு தெரிவிக்க வேண்டும்.
- ❖ இவ்வாறான புகார் வரப்பெற்ற வாக்குசாவடியில் புகார் தெரிவித்ததன் அடிப்படையில் EVM ல் அனுமதிக்கப்படும் Test Vote ன் காரணத்தால் EVM total Vote க்கும் 17A பதிவேட்டில் பதிவாகி உள்ள மொத்த ஓட்டு எண்ணிக்கைக்கும் வாக்கு எண்ணிக்கை கூடுதல் வித்தியாசம் வர வாய்பு உள்ளது.

**29. <u>A.S.D வாக்காளர் வாக்களிக்கும் முறை</u>**

- ❖ ஒரு வாக்குச்சாவடியின் A.S.D ( Absent, Shifted, Death) பட்டியலில் உள்ள வாக்காளர் ஒருவர் வாக்களிக்க வாக்குசாவடிக்கு வரும் பட்சத்தில் அவரது அடையாள ஆவணத்தை வாக்குச்சாவடி தலைமை அலுவலர் சரிபார்க்க வேண்டும்.
- ❖ PO-1 அலுவலர் அது குறித்த விபரத்தினை வாக்குசாவடி முகவர்களுக்கு தெரிவித்து அவ்வாக்காளரின் பெயரை உரக்க வாசிக்க வேண்டும்.
- ❖ அதன்பின் அவரது பெயரை 17 A பதிவேட்டில் பதிவு செய்து அவரது கையொப்பம் மற்றும் கைரேகை பெற வேண்டும்.
- ❖ கையொப்பம் இடத் தெரிந்தாலும், ASD வாக்காளரிடம் கட்டாயம் கைரேகை பெற வேண்டும்.
- ❖ அதன்பின் அவ்வாக்காளரிடம் ஒரு உறுதிமொழியினை பெற்று பின்னர் வாக்களிக்க அனுமதிக்கலாம். (பிற சேர்க்கை 14 ஐ பார்க)

**30. <u>E.D.C (Election Duty Certificate) வாக்காளர் வாக்களிக்கும் முறை</u>**

- ❖ தேர்தல் அலுவலரால் EDC வழங்கப்பட்ட ஒரே பாராளுமன்ற தொகுதியில் தேர்தல் பணியாற்றும் எவரும் அதே பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட எந்த வாக்குசாவடியிலும் வாக்களிக்கலாம்.
- ❖ அவ்வாறு EDC கொண்டு வரும் பணியாளரிடம் EDC ல் அவரது கையொப்பத்தினை பெற்று அதன்பின் PO-1 அலுவலர் அவரது பெயரை குறிப்பிட்ட வாக்காளர் பட்டியலில் (Marked Copy) இறுதியில் பதிவு செய்து அதற்கு தொடர் வரிசை எண்ணை வழங்கிட வேண்டும்.
- ❖ பின்னர் அந்த EDC சான்றினை PO-1 அலுவலர் தன் வசம் வைத்துக்கொள்ள வேண்டும்.
- ❖ அதன்பின் அவரது பெயரை 17 A பதிவேட்டில் அப்பணியாளரின் வாக்காளர் குறித்த விபரங்களை "**வரிசை எண்/பாகம் எண்/சட்டமன்ற தொகுதியின் பெயர்**" (எ.கா 316/141/திருச்சிராப்பள்ளி சட்டமன்ற தொகுதி) என குறிப்பிட்டு, வழக்கமான முறையில் வாக்களிக்க அனுமதிக்கலாம்.
- ❖ **தேர்தல் பணிச்சான்று (EDC) மூலம் வாக்களிக்கும் அலுவலர்களின் விபரங்களை வாக்காளர் பட்டியலின் குறியீட்டு நகலிலும் (Marked Copy), 17A பதிவேட்டிலும் பதிவு செய்யப்படுவதோடு அல்லாமல் அதன் விபரத்தினை Presiding Officers Diary மற்றும் படிவம் 17C -ல் மொத்த வாக்காளர்கள் கலத்தில் குறிப்பிட வேண்டும்.**

31. வாக்காளர் பதிவு எண்ணிக்கையினை கண்டறிய ஏதுவாக ஆண், பெண் வாக்காளர் விபரங்களை அதற்கான குறியீட்டு படிவத்தில் (Tally Sheet) தனித்தனியாக குறித்திட நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

32. வாக்கு சாவடியில் பதிவான வாக்குகளின் எண்ணிக்கையினை ஆண் பெண் என தனித்தனியாக **ஒவ்வொரு இரண்டு மணி நேரத்திற்கு ஒருமுறை மண்டல** அலுவலருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

**வாக்கு பதிவு முடிவுக்கு கொண்டு வருதல்**

- வாக்குப்பதிவு முடியும் நேரமான மாலை 06.00 மணிக்கு வாக்களிக்க வரிசையில் நிற்கும் கடைசி வாக்காளரிடமிருந்து சீட்டு (**Token**) வழங்குவதை ஆரம்பித்து முதலில் நிற்பவர் வரை சீட்டு வழங்கி வரிசையில் நிற்கும் அனைவரையும் வாக்களிக்க அனுமதிக்கவேண்டும்.

